பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 21 | செவ்வாய்க்கிழமை | 07.11.2023 | அதிர்வு 98

## ஆளுங்கட்சியுடன் அவசர சந்திப்பை நடத்திய ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று அவசர சந்திப்பை நடத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தில் 06▶

# மக்களை அரசு முடக்க இடமளியோம்!

## சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்

“மக்கள் ஆணை இல்லாத அரசு மக்களை முடக்கும் வகையிலான சட்டங்களை உருவாக்க முயற்சி செய்கின்றது.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

போராட்டங்கள் ஊடாக அந்த முயற்சியை முறியடிப்போம் என்றும் அவர் சூளுரைத்தார்.

“வேண்டாம் வாயை மூடும் சட்டங்கள்” என்ற மக்கள் கருத்தரங்கு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றபோதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.



# தேர்தல் இல்லையேல் மக்கள் மீண்டும் வீதியில் இறங்குவர்

## அமெரிக்காவில் நின்றுகொண்டு அரசுக்கு அநுரகுமார எச்சரிக்கை



**“அடுத்த வருடம் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தாவிட்டால் மக்கள் மீண்டும் வீதியில் இறங்குவார்கள்.”** 06▶



# கிரிக்கெட் பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சரவை உப குழு நேற்று நியமனம்



இலங்கை கிரிக்கெட் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, கிரிக்கெட் பிரச்சினை பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போதே இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அறிக்கை முன்வைக்க அமைச்சரவை உப குழு அமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான அலி சப்ரி, டிரான் அலஸ், காஞ்சன விஜேசேகர, மனுஷ நாணயக்கார ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

# கிளிநொச்சியில் நேற்றிரவு கஞ்சாப் பொதிகள் சிக்கின

– கிளிநொச்சி நிருபர் –

கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் பகுதியில் நேற்றிரவு கஞ்சாப் பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

23 பொதிகளில் 52 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது 06▶






யாழ்ப்பாணம் வந்திருக்கும் சீனத் தூதுவர் ஷி சென்ஹொங் தலைமையிலான தூது குழுவினர் நேற்று மாலை 5:30 மணி முதல் 7:30 மணி வரை இரு மணி நேரம் யாழ்ப்பாணம் ஜெற் விங் ஹோட்டலில் உள்ளூர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பத்துப் பேரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போது பொது அமைப்பினர் சார்பில் சீன தூதுவரிடம் ஒரு வினாத் 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# எந்தக் கட்சியை ஆதரிக்கவும் சந்திரிகா இன்னமும் தீர்மானிக்கவே இல்லையாம்!



**எந்தக் கட்சிக்கும் ஆதரவளிப்பது குறித்துத் தாம் தீர்மானிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

மீண்டும் தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் விசேட பதவியொன்றை அவர் கோரியுள்ளார் என வெளியாகியுள்ள தகவல்களை அவர் நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து அதற்கு ஆதரவளிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார், அதன் மூலம் அவர் அரசியலில் மீண்டும் ஈடுபடத் தீர்மானித்துள்ளார் எனக் கடந்த வாரம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அனுர பண்டாரநாயக்க ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்திருந்த – வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தாம் எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்கள் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் விசேட பதவியை கோரியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளன. இது முற்றிலும் தவறான விடயம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரே என்னிடம் வந்து எனது ஆதரவிற்கு மன்றாடினார். எனினும் நான் எந்த கட்சிக்கும் ஆதரவளிக்கத் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் பல கட்சிகளுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார் எனக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சரதி துஸ்மந்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியே தற்போது கட்சியின் போசகர் எனவும் தெரிவித்துள்ள அவர் கட்சியின் யாப்பை மாற்றி புதிய பதவிகளை அறிமுகப்படுத்தும் அளவிற்கு பேச்சுகள் இல்லை, ஆனால் அவர் எங்களிற்கு மிகப்பெரிய பலம், ஆகவே அவரின் ஆதரவை நாங்கள் பெறவேண்டும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆராச்சிக்கட்டுவவில் வீதிக்குக் குறுக்கே மரம் வீழ்ந்ததில் போக்குவரத்துப் பாதிப்பு






(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ராஜகந்தலுவ தபால் நிலையத்திற்கு அருகில் மரமொன்று நேற்று மாலை முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால், சில மணித்தியாலங்கள் புத்தளம் – கொழும்பு பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டது.

இந்த மரம் விழுந்ததில் மின்சார இணைப்பு மற்றும் தொலைபேசி இணைப்புகள் பாதிக்கப்பட்டிருந்தன.

மேலும், மரம் முறிந்து வீழ்ந்ததில் அந்த வீதியால் பயணித்த லொறியொன்றும் சேதமடைந்துள்ளதாகவும், எனினும் எவருக்கும் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சில மணித்தியாலங்களின் பின்னர் வீதியில் முறிந்து விழுந்த மரம் அகற்றப்பட்டதாகவும் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™
GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546   +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.   www.blueocean.lk   www.kelsey.lk

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**






Swami Vivekananda Cultural Centre,
High Comission of India, Colombo.
2nd
PRATHIBHA SANGAM
Competition
Categories of Competition
Indian Dance
Bharatanatyam
Kathak
Odissi
Hindusthani Music
Instrumental Music
Vocal
Carnatic Music
Instrumental Music
Vocal
Starting Date: 05.10.2023 (10.00 am IST)
Closing Date: 10.11.2023 (6.00 pm IST)
Competition Timelines
Winners to be announced in the month of November/ December 2023
For registration and guidelines
Awards & Prices
A Certificate | Cash Prizes
Cash prizes
for three winners in each genre
$500 $350 $250
Winners shall be invited to perform in India.
Swami Vivekananda Cultural Centre,
16/2, Gregory's Road, Colombo - 00700


Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.05, 19th Lane Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES
40 Years Housing Excellence
+94777 546 546
+94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடுக்கப்பட்டது.

"இலங்கையில் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக 13ஆம் திருத்தம் என்கிறது இந்தியா. அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய இணக்கத் தீர்வு என்கின்றது அமெரிக்கா. சீன தரப்பாக நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?" என்று நேரடியாகவே கேட்கப்பட்டது.

"வல்லரசாகவும் இலங்கையுடன் அதிக உறவு கொண்ட நாடாகவும் இன்று சீனாவும் உள்ளது. இலங்கையில் தமிழ் மக்களையும் மதித்து சம அந்தஸ்து உள்ளவர்களாக அவர்களை நடத்துமாறு இலங்கை அரசிற்கு சீனா ஆலோசனை கூற வேண்டும். எமது மக்கள் தமது உரிமைக்காக பல வழிகளில் முயன்றனர். அந்தப் போராட்டத்தின்போது உங்கள் நாடு சீனா இலங்கை அரசிற்கு ஆதரவளித்தது. பின்பு, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இப்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகளிலும் தமிழர்களிற்கு எதிராக – இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாகவே – சீனா செயற்படுகின்றது" எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

"அரசிற்கு ஆதரவளிப்பது எனபது எமது நாட்டின் கொள்கை. அரசிற்கு அரசு உதவும் கொள்கை என்பதன் அடிப்படையிலானது இது. ஒரு நாட்டின் அரசியல் முடிவு தொடர்பில் எமது நிலைப்பாட்டை நாம்கூற முடியாது. ஏனெனில் எங்கும் – வேறு எந்த நாட்டிலும் நாம் உள்ளூர் அரசியலில் தலையிடுவது கிடையாது" எனக் கூறி ஒருவாறு சமாளித்தார் சீனத் தூதுவர்.

## தேர்தல் இல்லையேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எச்சரிக்கை விடுத்தார்.

அமெரிக்காவின் தலைநகர் நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புலம்பெயர்ந்த இலங்கையர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோல்விப் பயம் காரணமாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை அரசு ஒத்திவைத்துள்ளது.

உள்ளூராட்சி சபையின் நிர்வாகத்தை ஆணையாளரின் கீழும் மாகாண சபைகளை ஆளுநர் நிர்வாகத்தின் கீழும் கொண்டு வர முடியும். எனினும், மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை மக்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதியே பிரயோகிக்க வேண்டும். எனவே, ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

அடுத்த வருடம் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

மக்கள் இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தாலும் ஏன் வீதிக்கு வருவதில்லை எனச் சிலர் கேட்கின்றனர். மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாது என்ற சமிக்ஞை கிடைத்தால் மக்கள் வீதியில் இறங்குவார்கள்.

அதிகாரத்தைப் பெற்ற பின்னர் நாட்டை மாற்றியமைப்பதற்கான அனைத்து சக்திகளையும் தேசிய மக்கள் சக்தி அரவணைக்கும்." – என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸார் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

## ஆளுநங்கட்சியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாலை 5 மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில் நேற்று இந்த அவசர சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2024ஆம் நிதி ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலும் நேற்றைய சந்திப்பில் பேசப்பட்டது என்று பிந்திக் கிடைத்த தகவல் தெரிவித்தது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புண்ணுக்கு நோவா? மருந்துக்கு நோவா?

"தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுடன் தங்கள் ஈடுபாட்டை முடுக்கிவிட வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதுவது மட்டும் பலன் தராது."

- இப்படிக் கூறியிருக்கின்றார் இணைந்த வடக்கு - கிழக்கின் முன்னாள் முதலமைச்சரான அ.வரதராஜப்பெருமாள். கடந்த சனியன்று கோயம்புத்தூரில் 'த ஹிண்டு' பத்திரிகைக்கு பேட்டியளித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

"(இந்த விடயத்தில்) இந்திய அரசு தனித்து - தன்பாட்டில் - செயல்பட முடியாது. அதற்கு, இந்திய மக்கள் மற்றும் தலைவர்களின் ஆதரவு இந்திய அரசுக்குத் தேவை. இலங்கையில் அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் எழ வேண்டும். அது உருவாக்கப்பட வேண்டும். புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும். எனவே, இதைச் செய்ய வேண்டிய முதன்மைப் பொறுப்பு தமிழ்த் தலைவர்களைச் சார்ந்தது."- என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

1983 -87 மற்றும் 1987 - 90 காலப் பகுதிகளில் இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுடன் ஈடுபாடு காட்டி நெருங்கிச் செயல்பட்டமையை இந்தப் பேட்டியில் அவர் நினைவு கூர்ந்தார்.

அவர் கூறிய கருத்தியல் சரியானது என்றாலும் அது வாதப் பிரதிவாதங்களுக்கு உரியது என்பதையும் நாம் மறுக்க முடியாது.

தன்னுடைய பூகோள அரசியலுக்காக இலங்கைத் தமிழர்பிரச்சினையைத்தனக்குவசமாகப்பயன்படுத்தி விட்டு, இலங்கை தமிழர்களை இந்தியா எப்படி நட்டாற்றில் கைவிட்டது என்பதை இலங்கை தமிழர் தரப்பில் அதிகம் பட்டுணந்து தெளிந்தவர் அவராகத்தான் இருப்பார்.

இலங்கை தமிழர்களை புதுடில்லி தன்னுடைய நலன் நோக்கில் முற்றாகக் கை கழுவி விட்டு விட்டு, இப்போது ஒரவஞ்சனையுடன் செயல்படுகின்றது என்ற கருத்து நிலைப்பாடு இலங்கைத் தமிழர்கள் மனதில் ஆழ வேரூன்றி வருகையில், அவர்களின் தலைவர்கள் வரதராஜப்பெருமாள் கூறுவது போல இந்தியத் தரப்புகளுடன் ஈடுபாட்டத்தைத் தீவிரப் படுத்துவது கூட அவர்களுக்குச் சிக்கலானதுதான்.

பூகோள அரசியல் சூழ்நிலை மாறி வருகிறது. வடக்கில் சீனத் தூதுவர் காட்டும் ஈடுபாடும், அதற்கு வடக்கில் காட்டப்படும் பிரதிபலிப்பும், தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, புதுடில்லிக்கும் நல்ல பாடத்தை உணர்த்தும் என்றே நம்புகிறோம்.

வரதராஜப்பெருமாள் கூறுவது போல இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுடனான ஈடுபாட்டை தீவிரப்படுத்த முன்னர், அதற்குத் தலைமாறாக, இலங்கைத்தமிழர்களுடனான ஈடுபாட்டை இந்தியா தேடித் தீவிரப்படுத்தி, செழுமைப்படுத்தி, நேர்சீராக்கி, உண்மைத் தன்மையுடன் முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் இந்தியத் தரப்புக்கு வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. நிலைமை அப்படித் தான் போய்க் கொண்டிருக்கின்றது.

'புண்ணுக்கு நோவா? மருந்துக்கு நோவா?' - என்ற கேள்வியில் எது புண், எது மருந்து என்ற சந்தேகம் தோன்றும் நிலைமைதான் இப்போது ஏற்பட்டுள்ளது.

## அத்தனகளு ஓயா, நில்வளா கங்கையை அண்மித்த பகுதிகளில் வெள்ள அபாயம்

### நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு



அத்தனகளு ஓயா மற்றும் நில்வளா கங்கைகளை அண்மித்து வெள்ளம் ஏற்படும் அபாயம் தொடர்ந்தும் நிலவுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டுமென நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் விநியோகப் பிரிவு பணிப்பாளர் எஸ் பீ சீ சுகீஷ்வர அறிவுறுத்தியுள்ளார்.

சில பகுதிகளில் அனர்த்தங்கள் பதிவாகி வருவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கலாஓயாவின் இருமருங்கிலும் வெள்ள அபாய நிலைமை காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இராஜாங்கனை மற்றும் அங்கமுவ நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே வெஹரகல நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் மாணிக்க கங்கையை பயன்படுத்துவோர் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர் விநியோகப் பிரிவு பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் சில மணித்தியாலங்களில் தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் தாழ்நிலப் பகுதிகளில் சிறுவெள்ளம் ஏற்படுமென நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாரியபொல, நிக்கவரெட்டிய, மஹவ, கொப்பேய்கனே, பிங்கிரிய, பள்ளம, சிலாபம், ஆரச்சிகட்டுவ மற்றும் ரஸ்நாயக்கப்புர பகுதிகளில் சிறுவெள்ளம் ஏற்படுமெனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளையில் மழை பெய்வதற்கான சாத்தியம் நிலவுவதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு – பதுளை பிரதான வீதியின் ஹல்துமுல்ல மற்றும் பெரகலவிற்கு இடையில் பத்கொட பகுதியில் ஏற்பட்டுள்ள மண்சரிவு தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

கடும் மழையுடனான பலத்த காற்றினால் பெரகல, ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, தியலும, தியத்தலாவ ஆகிய பகுதிகளில் மண்மேடுகள், கற்பாறைகள் விழும் அபாயம் நிலவுவதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."

– பிராங்க் லோயிட் றைற்
(அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)

# மன்னாரில் ஐஸ் போதைப்பொருளுடன் உள்ளூர் விற்பனை முகவர் சிக்கினார்!







**(மன்னார் நிருபர்)**

மன்னாரில் நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நபர் மற்றும் அவரிடம் இருந்து போதை பொருளைக் கொள்வனவு செய்த நபர் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணி அளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஐஸ் வகை போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார், புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி, தாராபுரம் உட்பட்ட பல பகுதியில் நீண்ட காலமாகப் போதை பொருள் விற்பனையாளராகவும் விற்பனை முகவராகவும் செயற்பட்ட இந்த நபர் மன்னார் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மன்னார் புதுக்குடியிருப்புப் பகுதியை சேர்ந்த 31 மற்றும் 20 வயதுடைய இருவரே புதுக்குடியிருப்புப் பாடசாலைக்கு அருகில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 21 கிராம் 9 மில்லி கிராம் ஐஸ் ரக போதைப் பொருள், ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் இரு கைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

அதே நேரம் பிரதான சந்தேக நபருக்கு 1 கிலோ ஐஸ் போதை பொருள் விற்பனைக்காக வந்த நிலையில் 21 கிராம் போதைப்பொருள் தற்போது கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் மிகுதி போதை பொருளைத் தேடும் நடவடிக்கையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் ஈடுபட்டு உள்ளனர் எனவும் கூறப்பட்டது.

# கிழக்கில் 499 பேருக்கு நேற்று அதிபர் நியமனம்




கிழக்கு மாகாணத்தில் அதிபர் தரம் 3 நிறைவு செய்த 499 பேருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் நேற்று நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நியமனங்கள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை இந்துக் கலாச்சார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கபில அத்துகோரல, வீரசிங்க, அதாவுல்லா, அலி சாஹிர் மௌலானா,பிரதம செயலாளர் ஆர்.எம்.கே.எஸ்.ரத்நாயக்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க உட்பட பல அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்களில் ஐந்து மாத்திரமே பதிவுசெய்யப்பட்டுள்ளன

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மஹரக பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நுண்கடன் நிதி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன. நுண்கடன்களை முன்னிலைப்படுத்திய தற்கொலைகள், முரண்பாடுகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் சமூகக் கட்டமைப்பில் காணப்படுகின்றன.

நுண்கடன் நிதி நிறுவனங்களின் முறையற்ற செயற்பாடுகளினால் சுமார் 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் 11 ஆயிரம் நுண்கடன் நிதி நிறுவனங்கள் இயங்குகின்ற நிலையில் அவற்றில் 05 நிறுவனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்ய பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தான் முறையற்ற வகையில் செயற்படுகின்றன. நிதி நிறுவனங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயப்படுத்தும் சட்டமூலம் எதிர்வரும் மாதமளவில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

பதிவு செய்யாத நிறுவனங்கள் 05 இலட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும்.தண்டப்பணம் செலுத்த தவறும் பட்சத்தில் 5 வருடகால சிறைத்தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

நுண்கடன் நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் நுண்கடன் கண்காணிப்பு அதிகார சபை அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவில் ஸ்தாபிக்கப்படும். இதனைத் தொடர்ந்து சகல நுண்கடன் நிதி நிறுவனங்களும் மத்திய வங்கியினால் நேரடியாகக் கண்காணிக்கப்படும். - என்று தெரிவித்துள்ளார்.

# பம்பலப்பிட்டியில் மரைன் வீதியின் ஒரு பகுதி தற்காலிகமாக மூடல்

பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தை அண்மித்து கரையோரப் பாதையின் (மரைன் வீதியின்) ஒரு பகுதியைப் போக்குவரத்துக்குத் தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வெள்ளவத்தை முதல் கரையோர மார்க்கத்தின் கொள்ளுப்பிட்டி வரை பயணிக்கும் வாகனங்கள் பம்பலப்பிட்டி ரயில் நிலைய வீதியூடாக காலி வீதிக்கு சென்று காலி வீதியூடாக கொள்ளுப்பிட்டி வரை பயணிக்க முடியும்.

கொள்ளுப்பிட்டியிலிருந்து கரையோரப் பாதையில் வெள்ளவத்தை வரை பயணிக்கும் வாகனங்கள் க்ளேன் ஆபர் பிளேஸில் திரும்பி காலி வீதிக்குச் சென்று டுப்ளிகேஷன் வீதியூடாக வெள்ளவத்தை வரை செல்ல முடியும்.

மூடப்பட்டுள்ள பகுதியை தவிர்ந்து ஏனைய பகுதியில் இரு திசைகளிலும் வாகனங்கள் பயணிப்பதற்கான இயலுமை உள்ளதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஹப்புத்தளை - பொரலந்தை வரையான வீதிப் போக்குவரத்து முற்றாகப் பாதிப்பு

## 13ஆம் மைல் கல் பகுதியில் பெரும் மண்சரிவு

ஹப்புத்தளையிலிருந்து பொரலந்தை வரையான வீதிப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 13 ஆம் மைல் கல் பகுதியில் பெரும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஹப்புத்தளையிலிருந்து பொரலந்தை வரையான வீதிப் போக்குவரத்தில் முற்றாக தடையேற்பட்டதென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஹப்புத்தளையிலிருந்து பொரலந்தை நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் தியத்தலாவை, கிரிந்த ஊடாக செல்ல முடியுமென பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பொரலந்தையிலிருந்து ஹப்புத்தளைக்கு பயணிக்கும் வாகனங்கள், கிரிந்த, தியத்தலாவை ஊடாக செல்ல முடியுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



வீதிப் போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்படும் வரை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் உண்ணாவிரதப் போராட்டம்










இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ள 64 தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பாதிக் கப்பட்ட மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த உண்ணாவிரத போராட்டம் தங்கச்சிமடத்தில் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ் வரம் மற்றும் மண்டபம் கடற்தொழில் துறைமுகங்களில் இருந்து கடந்த மாதம் 14 மற்றும் 28 ஆகிய இரு திகதிகளில் கடற்தொழிலில் சென்றபோது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 64 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல்லை தாண்டி கடற்தொழிலில் ஈடுபட்டனர் என 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இலங்கை வசம் உள்ள 133 விசைப்படகு மற்றும் நாட்டு படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இலங்கை நீதிமன்றத்தில் படகின் உரிமையாளர்கள் நேரடியாக முன்னி லையாகி விடுதலையான விசைப் படகுகளை மீட்பதற்கு மீட்பு குழு இலங்கை செல்வதற்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மீனவர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாரம்பரிய பகுதியான கச்சத்தீவு பகுதியில் தமிழக கடற்தொழிலாளர்களின் உரிமையை பெற்று தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தங்கச்சிமடம் யாகப்பா பேருந்து நிலை யத்தில் கடற்தொழிலாளர்கள் நேற்று உண்ணாவிரத போராட்டம் ஆரம்பித்தனர். இன்று மாலை 5 மணி வரை தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடு படவுள்ளோம் என்றும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

முன்னதாக தமிழக கடற்தொழி லாளர்கள் மீதான கைது நடவடிக்கை கண்டித்தும், கடற்தொழிலாளர்கள் கைது நடவடிக்கை தடுக்க தவறிய மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டது.

கடற்தொழிலாளர்களின் இந்த உண் ணாவிரத போராட்டம் காரணமாக நேற்று மற்றும் இன்று ஆகிய இரு தினங்கள் மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபட கடலுக்கு செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# டில்லியில் நிலநடுக்கம்: அச்சத்தில் மக்கள்

இந்திய தலைநகர் டில்லியில் நேற்று நில நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நேபாளத்தில் நேற்று மாலை 4.16 மணியளவில் ரிச்டர் அளவுகோலில் 5.6 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என தேசிய நில அதிர்வு மையம் அறி வித்துள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம் இந்தியா தலைநகர் டில்லியில் உணரப்பட்டுள்ளது.

டில்லியில் நிலநடுக்கம் உணரப்பட் டதும் மக்கள் அச்சத்தில் வீடுகள் மற்றும்



அலுவலகங்களில் இருந்து வெளியே ஓடி சென்றுள்ளனர் என அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், வாராணசி, பாட்னா, குருகிராம்,ஜெய்ப்பூர்ஆகியபகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. நேபாளத்தில் கடந்த நவம்பர் 3 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 100 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்துள்ளனர்.

# காசா மீதான இஸ்ரேல் தாக்குதலில் ஒரே இரவில் 200 பேர் உயிரிழப்பு!



காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரே இரவில் 200 பேர் பலியாகியுள்ளனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

காசாவின் ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேல் இராணுவத்துக்கும் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய போர், 30 நாட்களை கடந்தும் நீடித்து வருகிறது.

வான்வழித் தாக்குதலை மேற் கொண்டு வந்த இஸ்ரேல் இராணுவம், காசாவுக்குள் நுழைந்து தரைவழித் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. காசாவில் உள்ள தங்குமிடம், மருத் துவமனை மற்றும் நோயாளர் காவு வண்டிகள் உள்ளிட்டவற்றை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் தாக்கி வருகிறது.

போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அங்குள்ள மக்களின் நிலை மோசமடைந்து வருகிறது. அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் இஸ் ரேலுக்குதான் எங்களுடைய முழு ஆதரவு என அழுத்தம் திருத்தமாக தெரிவித்துள்ளன.

இஸ்ரேலின் தாக்குதல் அதிகரித்து வரும்நிலையில், அரபு மக்களின் கொந்தளிப்பும் அதிகரித்து வருகிறது. சிறைபிடிக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கானோர் இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு வெளியே போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஹமாஸ் ஒரு பரபரப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில், காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒரே இரவில் 200 பேர் பலியாகியுள்ளனர். மேலும் பலர் இன்னும் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளனர். இறப்பு எண்ணிக்கை காசா பகுதியின் வடக்குப் பகுதியை மட்டுமே உள்ளடக்கியது எனத் தெரி வித்துள்ளது.

இந்தப் போர் குறித்து போப் பிரான்சிஸ் வெளியிட்ட கருத்தில், பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலில் பலர் உயிரிழக்கும் மோசமான நிலையைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். கடவு ளின் பெயரால் நிறுத்துங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனர்களைக் கொல்ல இஸ்ரேலை அமெரிக்கா ஊக்குவிக்கிறது என ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி குற்றம்சாட்டியுள்ளார்.

இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி செய்தியாளர்களை சந்தித்தபோது, காசாவில் வடக்கு, தெற்கு எல்லாம் இப்போது இல்லை. மொத்த காசாவும் இரண்டாகப் பிரிந்துள்ளது. நாங்கள் காசாவை சூழ்ந்துவிட்டோம். இன்னும் 48 மணி நேரம்தான், காசா நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துவிடும் என்று எச்சரித்துள்ளார்.

# தாய்வானுக்கு இராணுவ உபகரணங்களை வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்பந்தம்!



தாய்வானுக்கு இராணுவ உபகரணங் களை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கைச்சாத்திட்டுள்ளார்.

இதற்கமைய, 80 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நவீன இராணுவ உபகரணங்களை அமெரிக்கா குறிப்பிட்ட காலப்பகுதியினுள் தாய்வானுக்கு வழங்கவுள்ளது.

இந்த தொகை முழுமையாக அமெரிக் காவினால் இலவசமாக தாய்வானுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா 40 வருடங்களுக்கு பின்னர் முதன் முறையாக வெளிநா டோன்றுக்கு தன்னிச்சையாக இலவ சமாக ஆயுதம் வழங்குவதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, உக்ரேன், ஆப்கானிஸ் தான், ஈராக், இஸ்ரேல், எகிப்து உட்பட பல நாடுகளுக்கு அமெரிக்கா மானிய அடிப்படையில் இராணுவ உபகரணங் களை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகள் அல்லது அமைப்புக்களுக்கு மட்டுமே அமெரிக்கா ஆயுத உதவிகளை மேற்கொண்டது.

ஐக்கிய நாடுகள் சபையினால் ஆயுதங்களை பெறுவதற்கான மெய்யு றுதியினை தாய்வான் பெறவில்லை.

இதன் காரணமாக தற்போது கைச்சாத்தான இலவச ஆயுத வழங்கல் ஒப்பந்தத்திற்கு சீனா வருத்தம் தெரிவிப்பதுடன் அதனை முற்றாக எதிர்ப்பதாகவும் சீற்றத்துடன் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் காங்கிரஸில் இருந்து அலிசப்ரி ரஹீம் எம்.பி. நீக்கம்

- அஸ்ஹர் ஆதம் -



அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நீக்கப்பட்டுள்ளார் என கட்சியின் தவிசாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

“நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னரே, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதியான அலிசப்ரி ரஹீம் சட்டவிரோதமாக தங்கத்தைக் கடத்திய சம்பவம், கட்சிக்கும் சமூகத்துக்கும் அவரை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கும் மற்றும் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே, இவரின் உறுப்புரிமையை நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பில், விசாரணை நடத்திய ஒழுக்காற்றுக் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் தேசிய கூட்டமைப்புக்கும் (MNA) இடையில் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் உடன்படிக்கையின் பிரகாரம், தராசுச் சின்னத்தில் அலிசப்ரி ரஹீம் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

இதற்கிணங்க, இவரது பதவி விலக்கல் குறித்த கடிதம் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவுக்கும், அலிசப்ரி ரஹீமுக்கும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தைப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா, இது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார்” என அமீர் அலி மேலும் தெரிவித்தார்.



# மற்றொரு சீன ஆய்வுக் கப்பல் இலங்கை வர விண்ணப்பமாம்

மற்றுமொரு சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு முதல் பகுதியில் இந்தக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இருப்பினும் இந்தக் கப்பலுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்த சீன ஆய்வு கப்பல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தருவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், இதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள சீன தூதரகம் எந்தவொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் சீனக் கப்பல்களின் பிரசன்னம் தொடர்பில் இந்தியாவினால் தொடர்ந்தும் பாதுகாப்புக் குறித்த கேள்வி எழுப்பப்பட்டு வரும் நிலையில், சீனா மீண்டும் அனுமதி கோரியுள்ளது.

இந்த நிலையில், சீனாவின் கோரிக்கை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என வெளிவிவாகர அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கபில பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 14 மாதங்களில் இரண்டு ஆய்வு கப்பல்களை சீனா இலங்கைக்கு அனுப்பியுள்ளது.

இதன்படி, கொழும்பு துறைமுகத்தில் அண்மையில் நங்கூரமிட்ட ‘ஷியான் 6’ எனும் சீன ஆய்வு கப்பல் இலங்கை கடற்பரப்பில் இரண்டு நாள் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சி முகவர் நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடல் நீரின் உப்புத்தன்மை மற்றும் வெப்பநிலை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் முதலாவது சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது.

இந்த நடவடிக்கையானது இந்திய பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்த இந்தியாவின் கவலையை மேலும் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அரச ஊழியருக்கு மட்டுமா சம்பள உயர்வு? தோட்டத் தொழிலாளர்களுக்கும் வேண்டும்

## போர்க்கொடி தூக்குகின்றார் பழனி திகாம்பரம் எம்.பி.





அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படுமாயின் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டுமென நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பழனி திகாம்பரம், மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“இன்று மக்கள் வாழமுடியாதுள்ளனர். அனைத்துப் பொருாகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இது நல்ல வேலை. அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும்.

அரசாங்கம் அதிகரித்தாலும் தோட்டக் கம்பனிகள் அதனை செய்யாது. தோட்டக் கம்பனிகளின் அதிகாரிகளை வரவழைத்து சம்பளத்தை அதிகரிப்பதற்கான உத்தரவுகளை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் நாட்டுக்காக உழைக்கும் மக்கள். அந்நியச் செலாவணி நாட்டுக்கு ஈட்டிக்கொடுக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டுக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றது. ஆனால், அவர்களுக்குத் தினசரி 500 - 950 ரூபாய் வரைதான் சம்பளம் கிடைக்கிறது.

அரசாங்க தோட்டங்களை கம்பனிகளுக்கு வழங்கியது போன்று, தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கினால் தேயிலை தோட்டங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு தேயிலை உற்பத்தி அதிகரிக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் 20 கிலோ தேயிலை கொழுந்தை பறித்தால் தினமும் 2000 ரூபாவை வருமானமாக ஈட்ட முடியும்.

இந்த முறைக்கு நாம் மாறாவிடின் தேயிலை தோட்டங்கள் காணாமல் போய் விடும். எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அரசாங்கம் உடனடியாக அதிகரிக்க வேண்டும்.” என்றார்.

# சீரற்ற காலநிலை காரணமாக எட்டு மாவட்டங்கள் பாதிப்பு!

## மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு



சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் எட்டு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை சுமார் ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர், உயிரிழப்பு ஒன்று பதிவாகியுள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் கலென் பிதுனுவெவ பிரதேசத்தில் இந்த உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த 35 வயதுடைய ஒருவரே மின்னல் தாக்கம் காரணமாக இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மண்சரிவு மற்றும் கற்பாறை சரிவுகள் காரணமாக கொழும்பு - பதுளை பிரதான வீதியின் ஹல்துமுல்ல - பத்கொட பகுதியில் ஒரு வழி போக்குவரத்து இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவொன்று குறித்த பகுதிக்கு சென்று முன்னெடுத்த பரிசோதனையின் பின்னர், அந்த பகுதியில் ஒரு வழி போக்குவரத்தை முன்னெடுக்க அனுமதி வழங்கியதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதுளை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஈ.எம்.எல்.உதய குமார தெரிவித்தார்.

இதேவேளை, அத்தனகலு ஓயாவின் துனமல பகுதியில் சிறு வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், அந்த ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நில்வளா கங்கையின் நீர்மட்டம் தலகஹகொட, பனடுகம பிரதேசங்களில் அதிகரித்துள்ளதால் குறித்த பகுதிகளில் சிறு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மொரகட்டிய பிரதேசத்தில் வலவை கங்கை பெருக்கெடுத்துள்ளதால் சிறு வெள்ள பெருக்கு நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மணித்தியாலங்களில் குருநாகல் மாவட்டத்தின் ஹத்படுனா ஓய பகுதியில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த பகுதியில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைப்பதற்கு அரசு எதிர்பார்த்துள்ளதாம்!

## வர்த்தக அமைச்சர் அறிவிப்பு

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகை காலத்தில் அதிகளவிலான பொருள்களை இறக்குமதி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலையை அதிகரிக்காமல், தற்போதைய விலை மட்டத்தில் அல்லது அதனை விட குறைந்த விலையில் வைத்து கொள்வதற்கான வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை வலியுறுத்துவது வரவேற்புக்குரிய விடயம்

## சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்



- த.சுபேசன் -

பாலஸ்தீனத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என எமது நாடும் வலியுறுத்தியிருப்பது வரவேற்புக்குரிய விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைதடியில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அங்கு மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

எமது நாட்டுச் சிறுவர்கள் சந்தோசமாக சிறுவர் தினத்தை கொண்டாடும் வேளையில் உலகின் இன்னொரு பகுதியில் சிறுவர்கள் அல்லல்படுவதும் – காயப்படுவதும் – கொல்லப்படுவதுமான சம்பவங்கள் இடம்பெறுவதனை மறக்க முடியாது.

விசேடமாக பாலஸ்தீனத்தில் நடக்கும் போரில் நாளாந்தம் பல சிறுவர்கள் அவயங்களை இழந்து வருகின்றனர்.

பாலத்தீனத்தில் நடக்கும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என உலகம் எழுப்பும் குரலோடு எங்கள் குரலையும் நாம் எழுப்ப வேண்டும்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் யுத்த நிறுத்தத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

120நாடுகள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். 14நாடுகள் எதிராக வாக்களித்தனர். 45நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலையாக இருந்தனர்.

ஒரு தீமை அல்லது அநீதி நடக்கும் போது நடுநிலையாக இருப்பது அந்த அநீதிக்கு துணைபோவதற்கு சமமானது.

வாக்கெடுப்பில் எமது நாடும் யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற 120நாடுகளில் ஒரு நாடாக இருந்துள்ளது. இது வரவேற்புக்குரிய விடயம். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.

விசேடமாக சிறுவர்கள் மிக மோசமாக பாதிக்கப்படும் சூழலை மனதில் கொண்டு யுத்தத்தை நிறுத்த வேண்டும். நாம் சிறிய நாடாக இருந்தாலும், நாம் சொல்வதனை யார் கேட்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தை விடுத்து, ஒவ்வொருவரும் குரல் கொடுக்க வேண்டும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# கொழும்பு-புத்தளம் ரயில் சேவை பாதிப்பு



- ரஸீன் ரஸ்மின் -

கொழும்பு – புத்தளம் ரயில் சேவை நேற்று திங்கட்கிழமை முதல் பங்க தெனிய வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தளம் – கொழும்பு ரயில் மார்க்கத்தின் பத்துளு ஓயா பிரதேசம் வெள்ளத்தினால் மூழ்கியதன் காரணமாகவே மேற்படி கொழும்பு – புத்தளம் வரையிலான ரயில் சேவைகள் பங்கதெனிய ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பத்துளு ஓயா ரயில் நிலையம் மற்றும் ரயில் தண்டவாளம், அதனை அண்டிய ரயில் தண்டவாளம், பிரதான வீதி உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் குறைவடைந்தால் ரயில் சேவைகள் வழமை போன்று இடம் பெறும் என புத்தளம் ரயில் நிலையத்தின் கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை நாளாந்தம் நான்கு தடவைகள் ரயில் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

புத்தளத்தில் இருந்து அதிகாலை 4 மணிக்கும், காலை 7.40 மற்றும் நண்பகல்11.55, மாலை 5.10 மணியளவில் இந்த ரயில் சேவைகள் கொழும்பு நோக்கி பயணத்தை மேற்கொள்கின்றன.

இவ்வாறு திடீரென ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டமையால் நாளாந்தம் ரயிலில் போக்குவரத்து செய்யும் புத்தளம் , பாலாவி, மதுரங்குளி மற்றும் முந்தல் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.














# யாழ். நகர மண்டப நிர்மாணப் பணி முதற்கட்டம் அடுத்த வருடம் நிறைவு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்

புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்.நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் நிறைவடையும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வாகனத் தரிப்பிடம், நவீன அலுவலகங்கள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் இது அமைக்கப்படுகிறது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 60 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

இது முழுக்க முழுக்க திறைசேரியில் இருந்து நிதியளிக்கப்பட்ட திட்டமாகும். மொத்த மதிப்பிடப்பட்ட தொகை 235 கோடி ரூபா ஆகும். யாழ்ப்பாண நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் 2022 நவம்பரில் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் கொவிட் -19 பரவல் மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி காரணமாக, இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமாகின.

எனினும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் யாழ். நகர மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இதற்கு தேவையான பணத்தை பெற்றுத்தர அமைச்சர் திறைசேரி அதிகாரிகளுடன் பல தடவை கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பழைய யாழ்ப்பாண நகர மண்டபக் கட்டிடம் 1939ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1985 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் மோதல்கள் காரணமாக முற்றாக அழிக்கப்பட்டது.

நல்லூர் கோவிலுக்குச் சொந்தமான காணியில் யாழ்ப்பாண மாநகர சபை தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாநகர சபையின் பல திணைக்களங்கள் இன்றும் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்றன. அதனால் யாழ். மக்கள் கடும் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பணியாற்றிய காலப்பகுதியில் 2019 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நகர மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

யாழ். நகர மண்டபத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்வதோடு, யாழ்ப்பாண மக்கள் மற்றும் அதிகாரிகளின் கடமைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கும் உரிய வசதிகள் குறித்து ஆராயுமாறும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு தாம் பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# மட்டு. மேய்ச்சல் தரைப் பகுதியில் புதிய பொலிஸ் சோதனைச்சாவடி

## ஞாயிறன்று திறந்துவைப்பு



- கனகராசா சரவணன் -

மட்டக்களப்பு மேய்ச்சல்தரை அமைந்துள்ள மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அமைக்கப்பட்ட பொலிஸ் சோதனை சாவடியை மட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிர்மன்ன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தமையை அடுத்து பொலிஸார் அங்கு கடமைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மேய்ச்சல்தரை பகுதியில் பொலிஸ் காவல் அரண் ஒன்று அமைக்குமாறு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பண்ணையாளர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய சோதனைசாவடி அமைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்மானப்படி, கரடியனாறு பொலிஸ் நிலையத்தின் பிரிவாக புதிய சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு அதனை நேற்று முன்தினம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சென்று பார்வையிட்டு, பொலிஸாரைக் கடமைக்கு அமர்த்தி பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.11.2023




உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளர்ச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பனியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உணவு முறையில் கவனம் தேவை. முறையான சிகிச்சையால் விரைவில் குணம் கிடைக்கும்.




இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயற்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள்.




முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணத்தை செலவு செய்ய நேரும். நெஞ்செரிச்சல் காரணமாக உங்கள் தந்தை அவதிப்பட நேரலாம்




இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.




உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.11.2023




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

இன்று வளர்ச்சி காணப்படுகின்றது. பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். திட்டமிடுவதன் மூலம் திறமையாகப் பணியாற்றலாம்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்குமிடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவிலான கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதி நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் வங்கியிருப்பை பராமரிப்பது கடினமாக உணர்வீர்கள்.




உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.

அமைதியான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.






# இலங்கைக் கிரிக்கெட்டின் வீழ்ச்சிக்கான காரணங்களை அடுக்குகிறார் இடைக்காலக் குழுத் தலைவர் ரணதுங்க

"இலங்கை கிரிக்கெட்டின் அழிவுக்கு கிரிக்கெட் நிர்வாக சபையே காரணம்" என இலங்கைக் கிரிக்கெட் இடைக்கால குழுவின் தலைவர் அர்ஜுன ரணதுங்க சாடியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட்டை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பணிகள் இந்திய ஒப்பந்தக் காரர்களுக்கு ஏற்ற வகையில் நடைபெறுகிறது எனவும் அர்ஜுன ரணதுங்க குற்றச்சாட்டியுள்ள அதேவேளை, சாகர ரத்நாயக்கவின் ஊடாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் ஜனாதிபதி இணைக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.



கிரிக்கெட்டின் தற்போதைய வீழ்ச்சிக்கு முன்னாள் வீரர்களான சங்கக் காரவும் மஹேல ஜெயவர்த்தனவுமே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் விரும்பும் அணியுடன் கிரிக் கெட்டை கட்டியெழுப்ப அதிகாரம் வழங் கப்பட்டால், ஆறு மாதங்களுக்குள் மீண்டும் எமது கிரிக்கெட்டை கட்டியெழுப்ப தயாராக உள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக் கெட்டைக் கட்டியெழுப்ப விரும்புகிறார் எனவும், ஆனால், கிரிக்கெட் நிர்வாகக் குழு அதற்கு அனுமதிக்காது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி தற போது படுமோசமாகத் தோல்விகளை அடைந்து வரும் நிலையில், தற்போதைய இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகக் குழு இடைநிறுத்தப்பட்டு, ஏழு பேர் கொண்ட புதிய இடைக்கால குழு நியமிக்கப்பட்டு, அதற்கு அர்ஜுன ரணதுங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# சாஹிரியான் கிரிக்கெட் தொடரில் சம்பியனானது 'லெஜண்ட் 96'

- நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம். ஷினாஸ் -

கல்முனை "சாஹிரியான் லெஜண்ட் பிரீமியர் லீக் - 2023" கிரிக்கெட் தொடரின் சம்பியன் கிண்ணத்தை லெஜண்ட் 96 கைப்பற்றியது.

கல்முனை சாஹிராக் கல்லூரியின் 46 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இத் தொடர்,கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில், லெஜண்ட் 90 அணியை எதிர்த்து லெஜண்ட் 96 அணி மோதியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய லெஜண்ட் 96 அணி, நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 82 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய லெஜண்ட் 90 அணி, 12 ஓவர்கள் முடிவில் 9 விக்கட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களையே சேர்த்தது.

இதையடுத்து, 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லெஜண்ட் 96 அணி வெற்றி பெற்று சம்பியனானது.





# முன்னாள் சம்பியன் இலங்கையின் ஆட்டம் முழந்தது!

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோற்ற இலங்கை அணி, அரையிறுதிக்கான வாய்ப்பை முழுமையாக இழந்து நடப்பு உலகக் கிண்ணத் தொடரைவிட்டு வெளியேறியது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று (06) நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின.

முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

குசல் பெரேரா (4), குசல் மெண்டிஸ் (19) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

பதும் நிஸங்க (41), சதீர சமரவிக்ரம (41) ஆகியோர் அரைச்சதம் அடிக்கும் வாய்ப்புகளைத் தவறவிட, ஷரித் அசலங்க (108) சதமடித்து அசத்தினார்.

பின்னர் வந்தவர்களுள் தனஞ்சய டி சில்வா (34), மஹேஷ் தீக்ஷன (21) ஆகியோர் தவிர வேறெவரும் இரட்டை இலக்கை எட்டவில்லை.

இறுதியில் இலங்கை அணி, 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 279 ஓட்டங்களைச் சேர்த்தது.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்து வீச்சில், தன்சிம் ஹசன் சகிப் 3 விக்கெட்டுகளையும், ஷொரிபுல் இஸ்லாம், ஷாகிப் அல் ஹசன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் ஹசன் மிராஜ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் 280 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, ஷாகிப் அல் ஹசன் (82), நஜ்முல் ஹ்சைன் ஷான்டோ (90) ஆகியோரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது.

இந்நிலையில், அஞ்சலோ மத்யூஸின் பந்துவீச்சில் இவர்கள் இருவரும் ஆட்டமிழந்தனர்.

இவர்கள் ஆட்டமிழந்தபோது பங்களாதேஷ் அணி, 210 ஓட்டங்களைக் கடந்திருந்தபோதும், சிறிது ஆட்டம் கண்டது.

எனினும், பின்னர் வந்த வீரர்கள் அணியை இழுத்துச் சென்று வெற்றியிலக்கை எட்டவைத்தனர்.

அந்த அணி, 41.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைச் சேர்த்து, 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில், டில்ஷான் மதுஷங்க 3 விக்கெட்டுகளையும், மஹேஸ் தீக்ஷன, அஞ்சலோ மத்யூஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பங்களாதேஷின் ஷாகிப் அல் ஹசன் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்ற பங்களாதேஷ் அணி, புள்ளிப்பட்டியலில் ஏழாவது இடத்துக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில் தோற்றதன் மூலம் இலங்கை அணி, அரையிறுதிக்கான வாய்ப்பை முழுமையாக இழந்து இந்தத் தொடரை விட்டு வெளியேறியது.

ஏற்கனவே, இங்கிலாந்து, நெதர்லாந்து, பங்களாதேஷ் அணிகள் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

அரையிறுதிக்கு முன்னேறும் அடுத்த இரு அணிகள் எவை என்பதற்கான போட்டியில், அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மத்யூஸின் ஆட்டமிழப்பால் சலசலப்பு!




உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக இன்று நடைபெற்ற ஆட்டத்தில், அஞ்சலோ மத்யூஸ் 'ரைம் அவுட்' முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டுள்ளார்.

மத்யூஸ் ஆடுகளத்துக்குள் நுழைந்த போது அவரது 'ஹெல்மெட்'டில் ஏதோ பிரச்சினை இருந்துள்ளது. இதனால், அவர் 2 நிமிடங்களுக்கு மேலாக துடுப்பெடுத்தாடாமல் இருந்துள்ளார்.

இந்நிலையில், பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாகிப் அல்ஹசன் நடுவரிடம் ஆட்டமிழப்புக் கோரியுள்ளார்.

இதையடுத்து கிரிக்கெட் விதிமுறைப்படி மத்யூஸ் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார்.

இந்த விடயம் தற்போது கிரிக்கெட் வட்டாரங்களில் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்பட்டு வருகின்றது.

பங்களாதேஷ் அணித்தலைவருக்கு விளையாட்டு உணர்வு எப்போதுமே இருந்ததில்லை என அவர்மீது விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

எது எப்படியோ 'ரைம் அவுட்' முறையில் ஆட்டமிழப்பது சர்வதேசக் கிரிக்கெட் வரலாற்றில் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 1.376 |
| 03 | அவுஸ்திரேலியா | 7 | 5 | 2 | 0 | 0 | 10 | 0.924 |
| 04 | நியூஸிலாந்து | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | 0.398 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 7 | 4 | 3 | 0 | 0 | 8 | -0.330 |
| 07 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.142 |
| 08 | இலங்கை | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.160 |
| 09 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 0 | 0 | 4 | -1.398 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 0 | 0 | 2 | -1.504 |